RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# காலந்தோறும் பெண் - இராஜம் கிருஷ்ணன்

**சு. ஈஸ்வரி [அ, *], மா. ரமாதேவி [ஆ]**

[அ] தமிழ்த்துறை, டாக்டர் எம்.ஜி.ஆர். கல்வி மற்றும் கல்வி நிறுவனம், அடையாளம்பட்டு, மதுரவாயல், சென்னை-600 095. தமிழ்நாடு. இந்தியா

[ஆ] தமிழ்த்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை - 600 032. தமிழ்நாடு. இந்தியா

# Women's Lives in Rajam Krishnan's Kalanthorum Pen: A Critical Study

**S. Eswari [a, *], M. Ramadevi [b]**

[a] Department of Dr. M.G.R. Educational and Research Institute, Adayalampattu, Maduravoyal, Chennai – 600 095, Tamil Nadu. India.

[b] Department of Tamil, Chellammal Women's College, Guindy, Chennai – 600 032, Tamil Nadu, India

* Corresponding Author:

Received: 02-11-2025
Revised: 23-02-2026
Accepted: 07-03-2026
Published: 16-03-2026

Check for updates

**ABSTRACT**

The status of women has historically been shaped by patriarchal structures and social domination, influencing every aspect of their personal and social lives. In her work Kalanthorum Pen (Women Through the Ages), Rajam Krishnan presents a comprehensive account of the changing lives of women, examining the cultural, social, and historical forces that have defined their experiences across different periods. Through a critical exploration of customs, traditions, and societal expectations, the author highlights both the oppression endured by women and their resilience in the face of social inequality. The work discusses several significant issues affecting women, including the practice of sati (widow immolation), the social evil of dowry, traditional bride-viewing customs, the cultural belief surrounding the "ten sons of a married woman" as an ideal of womanhood and fertility, women's education, and the role and representation of female deities in Tamil society. By examining these themes, Rajam Krishnan exposes the historical roots of gender discrimination while advocating the need for social awareness, equality, and women's empowerment. This article focuses on these selected themes presented in Kalanthorum Pen, analyzing how the author critiques patriarchal traditions and reflects on the evolving status of women in Tamil society. The study demonstrates that Rajam Krishnan's work is not merely a historical account of women's lives but also a powerful social commentary that calls for gender justice, educational advancement, and the recognition of women's dignity and rights.

**Keywords:** Dowry, Interitance, Marriage, Female, Education, Female Deities, Equality.

## முன்னுரை

காலந்தோறும் பெண் என்ற நூலில் இராஜம் கிருஷ்ணன் பெண்களின் வாழ்க்கை முறை, பண்பாடு, கலாச்சாரம் குறித்து எடுத்தியம்புகிறார். அதில் பெண் உடன்கட்டை ஏறுதல் (தீக்குளித்தல்), பெண்களின் வரதட்சணைக் கொடுமை, பெண் பார்க்கும் முறைகள், சுமங்கலியின் பத்துப் புத்திரர்கள், பெண் கல்வி மற்றும் பெண் தெய்வங்கள் பற்றி மட்டுமே இவ்வாய்வுக்கட்டுரையில் எடுத்துக்கூறப்பட்டுள்ளன.

## பெண் உடன்கட்டை ஏறுதல்: (தீக்குளித்தல்)

பெண்களின் நிலையானது அரசருக்குரிய சத்திரியக் குலத்தில் பிறந்தவர்களிடையே சதியாகத் தீக்குளிப்பு வழக்கமாக இருந்துள்ளது. கௌதமர் என்ற ஆதிகால ரிஷி 'பிராம்மணி தற்கொலை

செய்துகொண்டால் தனக்கோ தன் கணவருக்கோ சுவர்க்கம் தேட முடியாது' என்று கூறியதை பிற்கால மக்கள் மாற்றியமைத்துள்ளனர். இது குறித்த செய்திகளை இராஜம் கிருஷ்ணனின் 'காலந்தோறும் பெண்' என்ற நூலில் காண முடிகின்றது.

மேலும் பிரம்ம புராணக் கருத்துபடி இந்த உடன்கட்டை ஏறுதல், 'கணவன் வேற்று நாட்டில் இறந்தால், உத்தம பத்தினி அவனுடைய காலணிகளை மார்பில் வைத்துக்கொண்டு அக்கினியில் புகுவாள் என்ற குறிப்பும் காணப்படுகிறது.

சங்க இலக்கியத்திலும் இது குறித்த குறிப்புகள் இடம்பெற்றுள்ளது.

"தகவுடை மங்கையர் சான்றாண்மை சான்றார்

இகழினும் கேள்வரை எட்டி இறைஞ்சுவர்" (பரிபாடல்:20:80-81)

"கணவனை இழந்தோர்க்கு காட்டுவது இல்" (சிலம்பு.வழக்குறைக்காதை)

இந்த கொடுமையை இழிக்கும் பழங்கால ஆதிக்க ஆண்களை கேள்வி கேட்க ஆள் இல்லாமல் தவித்த போது, இராஜாராம் மோகன்ராய் இதற்கு குரல் எழுப்பியமையை இராஜம் கிருஷ்ணன் தனது நூலில் எடுத்தியம்புகிறார்.

கொடுமை செய்பவர்களைப் பார்த்து இராஜாராம் மோகன்ராய் கேள்வி எழுப்பினார். "கணவனை இழந்தவள் தானாகவே சங்கற்பம் செய்துகொண்டு உடன்கட்டை ஏற வேண்டும் என்பது தானே விதி? உங்கள் வழிக்கே வருகிறேன்; ஆனால் நீங்கள் மரித்த கணவனுடன் அவளை உயிரோடு கயிறு கொண்டு பிணைக்கிறிரே? பின்னர், அவளை வைத்து மேலே சிதை அடுக்குகிறீர்களே? அவள் எழுந்திருக்கவே இயலாதபடி பெரிய மூங்கில் தடிகளை வைத்து அழுத்துகிறிர்களே? ஹரிதரும் மற்ற முனிவர்களும் இதையெல்லாம் சொல்லி இருக்கிறார்களா?" (ப-133-134) என்று கேட்டார். இது முழுக்க முழுக்க பெண் கொலையாக மக்களால் பார்க்கப்பட்டது. மேலும் வில்லியம் பெண்டிங், இச்சதி ஒழிப்பைச் சாம்பலாக்கித் தீர்த்தார் என்ற கருத்தையும் இராஜம் கிருஷ்ணன் தன் நூலில் கூறியுள்ளார்.

## பெண் வரதட்சணைக் கொடுமை

தமிழ் நாட்டை பொறுத்த வரை இலக்கியம், பட்டிமன்றங்களில் தற்போதும் அதிகமாக பேசப்படுவது கண்ணகியின் கற்பும், மாதவியின் கன்னியமும் தான் எனலாம். பட்டிமன்றத்தில் மேலும் சுவைக் கூட்டும் வகையில் பல தலைப்புகள் இருந்தாலும், மிக முக்கியமான தலைப்பாக வரதட்சணைக் கொடுமைக்கு முக்கிய காரணம் ஆணா? பெண்ணா? என்ற வினா எழுப்பப்படுகிறது.

ஆணுக்கும் பெண்ணுக்கும் மனுவின் பெயரால் அழைக்கப்பட்ட நெறிகளின் படி எட்டு வகைத் திருமணங்கள் இருக்கின்றன. இதை தொல்காப்பிய நூற்பா வழி அறியலாம்.

"உளமலி காதல் களவு எனப்படுவது

ஒரு நான்கு வேதத்து இருநான்கு மன்றலுள்

யாழோர் கூட்டத்தின் இயல்பினது என்ப" (தொல்.களவு.நூற்பா.1)

1. பிரமம், 2. பிரசாபத்தியம் 3. ஆரிடம், 4. தெய்வம், 5. கந்தர்வம், 6. ஆசுரம், 7. இராக்கதம், 8. பைசாசம் போன்றவையாகும். மேலும் இன்றைய காலகட்டத்தில் பெண்களின் வரதட்சணை ஒழிப்புப் பற்றி கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள் மட்டுமே பொழுதுபோக்கிற்காகவும், கலை நிகழ்ச்சியின் தலைப்பாகவும் பேசப்படுகின்றன.

## பெண் பார்க்கும் முறை

பெண் பார்க்கும் முறை பற்றி தரும சூத்திரங்களில் குறிப்புகள் காணப்படுகின்றன. "இருபோகம் விளையும் வயல், மாட்டுக் கொட்டில், வேள்விச் சாலை, வற்றாத ஏரி, சூதாடும் இடம், நாற்சந்தி, வறண்ட நிலம், சுடுகாடு" (147) போன்ற முறைகளில் பெண் பார்க்கும் நிகழ்ச்சியானது நடைப்பெற்றது என்று இராஜம் கிருஷ்ணன் தம் நூலில் எடுத்துக் கூறியுள்ளார்.

## பெண் கல்வி

பெண் கல்வியைப் பற்றி இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசியல் தலைவர்களும், பல மக்களும் ஆதரித்து வந்தனர். "பெண் கல்வி, பெண் மானம், என்றெல்லாம் தலைப்பிட்டுப்

பெண்ணுக்காகக் குரல் கொடுத்த முதல் தமிழ் நாவல் ஆசிரியர் வேதநாயகம் பிள்ளை, ஸ்திரீகள் தங்களுக்குப் படிப்பிக்கும்படி புருஷர்களை வேண்டுவதாகப் பாடுகிறார்."

"உத்தமவான்களே - சத்திய பூமான்களே,

உங்கட்குக் கண்களான பெண்களாம் எங்களுக்கு,

வித்தையைப் படிப்பியுங்கள் - (தயவு செய்து)" (ப-179)

கொஞ்சம் படிப்பதால் உங்களை மீறிப் போய் நாங்கள் எதையும் செய்திட மாட்டோம் என்பது போல் இப்பாடல் அமைந்துள்ளதைக் காணலாம்.

"கொஞ்சம் நீர் கோபஞ்செய்யில் அஞ்சிடுவோம் - எங்கள்

குற்றம் பொறுக்கச் சொல்லிக் கெஞ்சிடுவோம்

தஞ்சமதாகவுமை நம்பிடுவோம் - உம்மேல்

சாகித்தியம் செய்து தினம் கும்பிடுவோம்...!" (ப-179-180)

மேலும் "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" (பழமொழி) என்ற வரிகளுக்கேற்ப, எங்களுக்குக் கல்வி கொடுங்கள் என கேட்பதுபோல பாடல் ஒன்று பாடப்பட்டுள்ளது.

"அடித்தாலும் முகம்கோணிச் சுழிப்போமா? - கல்லா

உதவாத கணவரானாலும் பழிப்போமா?"

நம் பாரதி பெண் விடுதலைக்காகவும், பெண் கல்விக்காகவும் பல பாடல்களைப் பாடியுள்ளார். இதில் கல்வியின் குறிக்கோளாந்து ஓர் ஆணின் சுகத்திற்காக இல்லை எனக் கோடிட்டுக் கூறியுள்ளார்.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்

பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்

எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை"(பெண்கள் விடுதலை கும்மி-6)

என பாடியுள்ளார்.

"கல்வி இல்லாத பெண்கள் களர் நிலம் போல"(கும்மிப்பாடல்)

என்று பாரதிதாசன் தம் கும்மிப் பாடலிலும் பெண் கல்வி பற்றி கூறியுள்ளார்.

## பெண் தெய்வங்கள்

ரிக் வேதப் பாடல்களில் பெண் தெய்வங்களை மக்கள் போற்றினார்கள். இருந்தாலும் இயற்கையின் ஆற்றல்களாகிய மாண்புகளே, அந்த தெய்வங்களுக்கு உருவமாகக் கொடுக்கப்பட்டன. அத்தெய்வங்களிடையே வழிபாடு முறை கெடுதல், பயமுறுத்துதல், உயிர்ப்பலி போன்ற கூறுகளாகக் காணப்படவில்லை. மனிதன் முதன் முதலாக, பிறப்பையும், இறப்பையும் தன் அறிவுக்கு எட்டாத பெரிய வியப்பாகப் பார்த்தான். 'மனித சமுதாயம்' என்ற நூலில் ராஹீல் ஸாங்க்ருத்யாயன், இதைப் பற்றி கூறியுள்ளார்.

"கற்பு என்று ஒரு நெறி, வலியுறுத்தப் பெறுகிறது. பெண்ணுக்கு மட்டுமே மாரி, பிடாரி எல்லையம்மன் என்ற சிறுபெண் தெய்வங்களனைத்தும் அந்தந்த இடத்தைச் சார்ந்த வரலாறுகள் - பல விவரங்களைத் தருகின்றன. குறிப்பாக, ரேணுகாதேவி அம்மன், மாரியின் அம்சமாகக் கருதப்படுகிறாள்." (ப-186)

மேலும் அண்மைக் காலங்களில் "துர்க்கை, காளி, பராசக்தி, மாரி என்ற தாய் வழிபாட்டுத் தெய்வங்கள் இந்நாளில், மூலை முடுக்குகள் விடாமல் பல பெயர்களில் கோயில் கொண்டுள்ளனர். சந்தோஷி மாக்கள், சீதளா தேவியர், கண்ணகி, பசுவதி, என்று நாடு முழுதும், இத்தெய்வ வழிபாடுகள் அண்மைக் காலங்களில் செல்வாக்குடன் பரவி வருவதைக் காண்கிறோம்." (ப-188-189)

சங்க இலக்கியத்தில் கூட பெண் தெய்வங்கள் பற்றிய குறிப்புகள் இடம்பெற்றுள்ளன. பெண் தெய்வங்களில் கொற்றவை வீரர்கள் போர்க்களத்தில் வெற்றி பெற வணங்கக் கூடிய தெய்வமாகக் கருதப்படுகிறது.

"கடல்கெழு செல்வி கரை நின்றாங்கு

நீயே கானம் ஒழிய யானே

வெறிக்கொள் பாவையிற் போலவெண் அணித்துறந்து" (அகம்.370:12-14)

“வலைவலந் தன்ன மென்நிழல் மருங்கின்

காடுஉறை கடவுட்கடன் கழிப்பிய பின்றை" (பெரும்பாண். 49-50)

“எவ்வனங்கும் அடிவனங்க

இப்பெருமை படைத்துடைய

அவ்வணங்கை அகலாத

அலகைகளை இனிப்பகர்வாம்” (கலிங்கத்துப்பரணி.4)

“பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய் நொடித்தாங்கு” (கலி.89) எனவும்

“நெற்றி விழியா நிறைத்திலகம் இட்டாளே

கொற்றவைக் கோலங் கொண்டு ஓர் பெண்” (பரி.11)

“வருவன சங்கப் பிற்காலச் சான்றுகளாகும்.

அவ்வாறே, கொற்றவைச் சிறுவன் (திரு.முருகு. .250)

கலிங்கத்துப்பரணி, கலித்தொகை, பரிபாடல், திருமுருகாற்றுப்படை போன்ற இலக்கியப் பாடல்களிலும் கொற்றவை வழிபாடு குறித்தக் குறிப்புகள் காணப்படுகின்றது.

## முடிவுரை

பெண்களின் நிலை ஒரு குறிப்பிட்ட ஆதிக்கத்தின் எதிரொலியாகக் காணப்படுகிறது. நாம் ‘காலந்தோறும்’ வரலாறாகத் தொடர்ந்து வரும் அடக்கு முறைகளையும், ஆதிக்கக் கூறுகளையும், சாத்திர, சமயப் போர்வைகளையும் கிழித்து, புதிய சமுதாயத்தையும், புதிய சமத்துவத்தையும் பெண்ணுக்கு வழிவகைச் செய்வோம் என்பதை இவ்வாய்வுக் கட்டுரை வாயிலாக அறியலாம்.

## References

Rajam Krishnan, (1989) Women through Time (Sociological Research Thagam Publishing House, Chennai

C. Subramania Bharathiyar, (2012) Bharathiyar Poems, Leo Book Publish Chennai

Bharathidasan, (2023) Bisiranthaiar Play, Meenakshi Bookstore

K. Vellaivaranan, (1983) Tholkappiyam Field Textbook, Madurai Kamaraj University, Madurai

S.V. Subramanian, (2010) Akananuru, Manivasagar Publishing House, Chennai

Sakthidasan Subramanian, (1958) Kalithokya Moolamum Prakash, Anbu Publications, Puducherry

S.V. Subramanian, (2010) Paribadal, Manivasagar Publishing House, Chennai

Sengai Boduvan, (2009) Sangam Nool Mulamum News Text, Sengai Selvi, Chennai

S.V. Subramanian, (2009) Thirumurukatruppadi, Meiyappan Publishing House, Chidambaram

Puliyur Keshikan, (2018) Silappathikaram Moolam and Text, Kaura Publishing House, Chennai.

Puliyur Keshikan, (2022) Kalingathupparani, Rhythm Publications, Chennai

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License